செய்தி வெளியீடு எண்: 458 நாள்: 16.07.2018

## செய்தி வெளியீடு

## இந்திய மருத்துவ முறை படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை +2 தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலேயே நடைபெறும் – முதலமைச்சர் அறிவிப்பு

தமிழ்நாட்டில் இந்திய மருத்துவ முறை படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் (நீட்) பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் நடைபெற வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (16.7.2018) தலைமைச் செயலகத்தில், ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்திய மருத்துவ முறை படிப்புகளுக்கான (சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஓமியோபதி) மாணவர் சேர்க்கை, தமிழ்நாட்டில் இதுவரை +2 தேர்வுகளில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் நடைபெற்று வருகிறது. கடந்த இரண்டு கல்வியாண்டுகளிலும் மத்திய அரசு இந்திய மருத்துவ முறை படிப்புகளுக்கு நீட் தேர்வை பின்பற்ற அறிவுறுத்தியது. அதற்கு தமிழ்நாடு அரசு தனது கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

மாநில அரசின் கொள்கை ரீதியான எதிர்ப்பையும் மீறி, தமிழ்நாடு தொழில்முறை கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக்கான சட்டம் 2006–ன் பிரிவுகளுக்கு முரணாக, நீட் தேர்வை இந்திய மருத்துவ முறை படிப்புகளுக்கு அறிமுகப்படுத்த முடியாது என்ற தனது உறுதியான நிலைப்பாட்டை மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மத்திய அரசுக்கு ஏற்கனவே தெளிவாக தெரிவித்துள்ளது.

மேலும், தற்பொழுதுள்ள இந்திய மருத்துவ முறை மத்திய குழு சட்டத்தில் மாணவர் சேர்க்கைக்கான எந்தவொரு திருத்தத்தையும் மத்திய அரசு

மேற்கொள்ளவில்லை என்பதும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதனையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில், **இந்திய மருத்துவ முறை மற்றும் ஓமியோபதி கல்லூரிகளில், +2 தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலேயே மாணவர் சேர்க்கை தொடர்ந்து நடைபெறும்** என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி.தங்கமணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயகுமார், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. சி.வி.சண்முகம், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் கே.செந்தில்ராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் பி.உமாநாத், இ.ஆ.ப., சட்டத் துறை செயலாளர் திரு. சு.ச.பூவலிங்கம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை கூடுதல் செயலாளர் திரு. எஸ்.நாகராஜன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 16.7.2018**